# நிதி நிலை முடிவுகள்



இந்திய நிறுவனங்கள் தமது 2019 அக்டோபர்–டிசம்பர் காலாண்டு நிதி நிலை முடிவுகளை வெளியிட்டு வருகின்றன. முன்னணி நிறுவனங்களின் வருவாய் மற்றும் லாப வளர்ச்சிப் புள்ளிவிவரங்கள் வருமாறு:–

## தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ்

தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனம், டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் (2019) ரூ.13.17 கோடியை நிகர லாபமாக ஈட்டி உள்ளது. கடந்த நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.14.13 கோடியாக இருந்தது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் வருவாய் (ரூ.305 கோடியில் இருந்து) ரூ.283 கோடியாக குறைந்துள்ளது. எனினும் மொத்த லாபம் (ரூ.24 கோடியில் இருந்து) ரூ.26 கோடியாக அதிகரித்து இருக்கிறது.

## கே.ஐ.ஓ.சி.எல்.

கே.ஐ.ஓ.சி.எல். நிறுவனம், 2019 டிசம்பர் காலாண்டில் ரூ.3.6 கோடியை இழப்பாகக் கண்டுள்ளது. கடந்த நிதி ஆண்டின் இதே காலத்தில் இந்நிறுவனம் ரூ.21.15 கோடி லாபம் ஈட்டி இருந்தது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த செயல்பாட்டு வருவாய் (ரூ.425 கோடியில் இருந்து) ரூ.478 கோடியாக உயர்ந்து இருக்கிறது.

## ரெப்கோ ஹோம் பைனான்ஸ்

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் நிறுவனம், 2019 அக்டோபர்–டிசம்பர் காலாண்டில் ரூ.70 கோடியை நிகர லாபமாக ஈட்டி உள்ளது. கடந்த நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.56 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 25 சதவீதம் உயர்ந்து இருக்கிறது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த செயல்பாட்டு வருவாய் 12 சதவீதம் வளர்ச்சி கண்டு (ரூ.304 கோடியில் இருந்து) ரூ.340 கோடியாக அதிகரித்துள்ளது.

## பீ.எஸ்.இ.

மும்பை பங்குச்சந்தை நிறுவனம் (பீ.எஸ்.இ), டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த மூன்றாவது காலாண்டில் ரூ.45 கோடியை ஒட்டுமொத்த நிகர லாபமாக ஈட்டி உள்ளது. கடந்த நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.50 கோடியாக இருந்தது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் (ரூ.177 கோடியில் இருந்து) ரூ.149 கோடியாக குறைந்து இருக்கிறது.

## ஜிந்தால் ஸ்டெயின்லெஸ்

ஜிந்தால் ஸ்டெயின்லெஸ் நிறுவனம், மூன்றாவது காலாண்டில் (2019 அக்டோபர்–டிசம்பர்) ரூ.52 கோடியை ஒட்டுமொத்த இழப்பாகக் கண்டுள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.45 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 16 சதவீதம் அதிகரித்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் 0.12 சதவீதம் குறைந்து ரூ.3,311 கோடியாக இருக்கிறது.

## சி.இ.எஸ்.இ.

சி.இ.எஸ்.இ. நிறுவனம், 2019 அக்டோபர்–டிசம்பர் காலாண்டில் 2 சதவீத வளர்ச்சியுடன் ரூ.176 கோடியை தனிப்பட்ட நிகர லாபமாக ஈட்டி இருக்கிறது. கடந்த நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.173 கோடியாக இருந்தது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் செயல்பாட்டு வருவாய் 4 சதவீதம் சரிந்து (ரூ.1,707 கோடியில் இருந்து) ரூ.1,648 கோடியாக குறைந்துள்ளது. மொத்த லாபம் 18 சதவீதம் குறைந்து ரூ.214 கோடியாக இருக்கிறது.

இந்நிறுவனம் தனது பங்குதாரர்களுக்கு, ரூ.10 முகமதிப்பு கொண்ட பங்கு ஒன்றுக்கு ரூ.20–ஐ இடைக்கால டிவிடெண்டாக அறிவித்துள்ளது.

## என்.எல்.சி.

என்.எல்.சி. இந்தியா நிறுவனம், டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த மூன்றாவது காலாண்டில் ரூ.400 கோடியை ஒட்டுமொத்த நிகர லாபமாக ஈட்டி உள்ளது. கடந்த நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.349 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 15 சதவீதம் உயர்ந்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருவாய் (ரூ.2,863 கோடியில் இருந்து) ரூ.3,093 கோடியாக அதிகரித்து இருக்கிறது.